DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM
**CC.No.60/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW1 | Caste | : | |
| Name | : | கணேசலிங்கம் | Age | : | |
| F/N. | : | சோனை | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 5th day of July 2022.
05.07.2022.
முதல் விசாரணை:-

நான் தற்போது உதவி வனப்பதுகாவலராக வன உயிரினக்கோட்டம், இராமநாதபுரத்தில் பணியாற்றிவருகிறேன். கடந்த 06.09.2015-ம் தேதி மண்டபம் வனச்சரகத்தை கூடுதலாக கவனிக்க வந்தபோது சரக பணியாளர்கள் மண்டபம் வடக்கு கடற்கரை முனைக்காடு சூட்டிங் திடல் பகுதியில் காலை 04.30 மணியளவில் ரோந்து பணி செய்து கொண்டிருந்தபோது அங்கிருந்த மூன்று பேர் பச்சை கடல் அட்டைகளை எடுத்துக்கொண்டிருந்தபோது அவர்களை பிடிக்க முற்பட்டபோது 1 எதிரி மட்டும் தப்பி ஓடிவிட்டார். இருவரை பிடித்து விசாரித்ததில் அவர்கள் பெயர் முகமது ரமலான் கனி, வயது 24 என்பதும், மற்றொருவர் சீனி யாசிக், தப்பி ஓடியவரின் பெயர் அல்லா பிச்சை, வேதானை என்பதும் தெரியவந்தது. அங்கிருந்த பொருட்களை சோதனை செய்த போது பச்சை கடல் அட்டைகள் 280 கிலோ மற்றும் இரு சக்கர வாகனம் TN 65 B 6746 ஆகியவற்றை கைப்பற்றி விசாரணை செய்து மண்டபம் வனச்சரக அலுவலகம் கொண்டு வந்து எனக்கு தகவல் கொடுத்தனர். அப்போது நான் தலைமையிடம் இராமநாதபுரத்தில் இருந்த காரணத்தினால் விசாரணைக்கு கொண்டு வரச்சொன்னதால் இரண்டு நபர்களையும், கைப்பற்றிய பொருட்களையும் கொண்டு வந்தார்கள். நான் அவர்களிடம் விசாரணை செய்து மேல் அலுவலர்களின் விசாரணைக்காக இரவு 10.00 மணிக்கு மேல் இராமநாதபுரம் வனச்சரக அலுவலக்த்தில் திரு.வடமலையான், வனக்காப்பாளர் பொறுப்பில் எதிரிகளை வைத்திருந்தேன். 07.09.2015-ம் தேதி காலை 06.00 மணியளவில் மேற்படி இரண்டு எதிரிகளும் தப்பி ஓடிவிட்டதாக எனக்கு தகவல் தெரிவித்தார்கள். நான் உடன் வந்து விசாரணை செய்து தேடிபார்த்ததில் எதிரிகள் அப்போது கிடைக்கவில்லை. தொடர்ந்து பிடிப்பதற்கு முயற்சி செய்தேன். எதிரிகள் மூவரும் 14.09.2015-ம் தேதி நீதிமன்றம் மூலம் ஜாமீன் பெற்றதாக தெரியவந்தது. பிடிபட்ட 280 கிலோ கடல் அட்டைகளை பிரிவு வனக்காப்பாளர் வடமலையான் அவர்களின் H நமூனா எண்.00244580 கீழ் 07.09.2015-ல் பதிவு செய்து பின்னர் என்னால் அத்தாட்சியில் கைப்பற்றி படிவம்-95 தயார் செய்தேன். அழுகி வரும் கடல் அட்டைகளை அழிப்பதற்கு P.R.No.18/2016 பெற்று நீதிமன்ற வளாகத்தில் அழிக்கப்பட்டது. H நமூனா அ.சா.ஆ.1 ஆகும்.

அத்தாட்சி அ.சா.ஆ.**2** ஆகும். படிவம்-95 அ.சா.ஆ.**3** ஆகும். எதிரிகள் செய்த குற்றமானது 1972 வருட வன உயிரின பாதுகாப்புச்சட்டம் திருத்திய சட்டம் 2002-ன் படி பிரிவு.9, 39,50,51-ன் படியும், பிடிபொருட்கள் பட்டியல் -1 Part IVC தண்டனைக்குரிய குற்றம். எனவே, நான் எனது ஆவணங்களின் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையில் 02.06.2016-ல் அ படிவம் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். வழக்கு சொத்தான இருசக்கர வாகனம் வனச்சரக அலுவலகத்தில் உள்ளது.

குற்றச்சாட்டு வனைந்த பின்பு குறுக்கு விசாரணை செய்வதாக எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் சொல்லப்பட்டது.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM
**CC.No.60/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW2 | Caste | : | |
| Name | : | வடமலையான் | Age | : | |
| F/N. | : | சாத்தையா | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 5th day of July 2022.

05.07.2022.

முதல் விசாரணை:-

நான் கீழக்கரை வனச்சரகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று கீழக்கரை தாலுகா மேலச்சீத்தையில் வசித்து வருகிறேன். ஆஜர் 1 வது எதிரியை தெரியும். 06.09.2015-ம் தேதி வனச்சரகர் தலைமையில் நாங்கள் முனைக்காடு பகுதிக்கு ரோந்து சென்றோம். அப்போது நான் மற்றும் வேட்டைத் தடுப்புக்காவலர் மலைராஜ், வெங்கேடஷ் மற்றும் கார்டு கண்ணபிரான் ஆகியோர் முனைக்காடு கடற்கரை அருகே சென்றபோது ஒரு வத்தை வந்தது கடலில் இருந்து. அதில் 280 கிலோ கடல் அட்டைகள் இருந்தது. அந்த வத்தையில் எதிரிகள் வந்திருந்தார்கள். அவர்களிடமிருந்து அட்டையை வனச்சரகர் கைப்பற்றினார். கைப்பற்றி தயார் செய்த அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. அது அ.சா.ஆ.4 ஆகும். வழக்கு சம்பந்தமாக வனச்சரகர் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள்.

குற்றச்சாட்டு வனைந்த பின்பு குறுக்கு விசாரணை செய்வதாக எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் சொல்லப்பட்டது.

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
RAMESWARAM
**CC.No.60/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW3 | Caste | : | |
| Name | : | கண்ணபிரான் | Age | : | |
| F/N. | : | | Occupation | : | |
| Village | : | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 5th day of July 2022.
05.07.2022.
முதல் விசாரணை:-

நான் தற்போது திருப்பத்துார் வனச்சரகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் 1 வது எதிரியை தெரியும். 06.09.2015-ம் தேதியன்று முனைக்காடு சூட்டிங் திடல் பகுதியில் நானும், வடமலையான், வெங்கடேசன், மலைராஜ், ரோந்து பணி செய்தபோது 280 பச்சை கடல் அட்டை அல்லா பிச்சை என்பவரிடமிருந்து பிடிக்கப்பட்டு இராமநாதபுரம் வனச்சரக அலுவலகம் கொண்டு வரப்பட்டது. மேற்படி கடல் அட்டையை எதிரிகளிடமிருந்து வனச்சரகர் அத்தாட்சியில் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. அது அ.சா.ஆ.5 ஆகும். வழக்கு சம்பந்தமாக வனச்சரகர் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்.

குற்றச்சாட்டு வனைந்த பின்பு குறுக்கு விசாரணை செய்வதாக எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் சொல்லப்பட்டது.